جمعية الدعوة والإرشاد
وتوعية الجاليات بالخبر

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

தொகுப்பு
அல்கோபார் அழைப்பகம், தமிழ்ப் பிரிவு

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

01-A

دَارُ السَّلٰمُ

## தாருஸ் ஸலாம்

### அல்குர்ஆனில் தாருஸ் ஸலாம் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 2

அவர்களுக்கு அவர்களுடைய இறைவனிடம் (சாந்தியும்) சமாதானமும் உள்ள வீடு (தாருஸ் ஸலாம் எனும் சுவர்க்கம்) உண்டு – அவர்கள் செய்த (நன்மைகளின்) காரணமாக அவன் அவர்களுடைய உற்ற நேசனாகவும் இருக்கிறான்.

அல்குர்ஆன் 6 : 127

# دَارُ السَّلٰمُ

# தாருஸ் ஸலாம்

## அல்குர்ஆனில் தாருஸ் ஸலாம் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 2

மேலும் அல்லாஹ் (உங்களை) தாருஸ் ஸலாமை நோக்கி அழைக்கின்றான்; அவன் நாடியவரை நேர் வழியில் செலுத்துகிறான்.

அல்குர்ஆன் 10 : 25

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

02

# جَنَّةُ الْخُلْد

# ஜன்ன(த்)துல் ஹு(خ)ல்த்

## அல்குர்ஆனில் ஜன்ன(த்)துல் ஹு(خ)ல்த் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 1

அ(த்தகைய நரகமான)து நல்லதா? அல்லது பயபக்தி உடையவர்களுக்கு வாக்களிக்கப்பட்டுள்ள (ஜன்ன(த்)துல் ஹு(خ)ல்த் எனும்) நித்திய சுவர்க்கம் நல்லதா? அது அவர்களுக்கு நற்கூலியாகவும், அவர்கள் போய்ச் சேருமிடமாகவும் இருக்கும்” என்று (அவர்களிடம் நபியே!) நீர் கூறும்.

அதில் அவர்களுக்கு விரும்பியதெல்லாம் கிடைக்கும், (அதில்) அவர்கள் நிரந்தரமாகத் தங்குவார்கள் – இதுவே உமது இறைவனிடம் வேண்டிப் பெறக்கூடிய வாக்குறுதியாக இருக்கும்.”

**அல்குர்ஆன் 25: 15,16**

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

03

دَارَ الْمُقَامَةِ

## தாருல் முகாமஹ்

அல்குர்ஆனில் தாருல் முகாமஹ் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 1

அவன் தன் அருளிலிருந்து என்றென்றும் (தாருல் முகாமஹ் எனும்) நிலையான வீட்டில் எங்களை இருக்கச் செய்தான், அதில் எந்த விதமான சங்கடமும் எங்களைத் தீண்டுவதில்லை. அதில் எங்களை எந்தச் சோர்வுகளும் தீண்டுவதில்லை (என்றும் கூறுவார்கள்).

அல்குர்ஆன் 35:35

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

04

# جَنَّةُ الْمَاْوٰى

# ஜன்னதுல் மஃவா

அல்குர்ஆனில் ஜன்னதுல் மஃவா எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 3

எவன் தன் இறைவன் முன் நிற்பதை அஞ்சி மனதையும் இச்சைகளை விட்டு விலக்கிக் கொண்டானோ, நிச்சயமாக அவனுக்கு (**ஜன்னதுல் மஃவா எனும்**) சுவர்க்கம்தான் தங்குமிடமாகும்.

**அல்குர்ஆன் 79:40,41**

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

05

جَنَّةُ عَدْنٍ

# ஜன்னது அத்ன்

## அல்குர்ஆனில் ஜன்னது அத்ன் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 11

அ(த்தகைய)வர்கள் ( அத்ன் எனும்) நிலையான சுவனபதிகளில் புகுவார்கள். அங்கே அவர்கள் பொன்னாலும், முத்தாலுமான கடகங்கள் அணிவிக்கப்படுவார்கள். இன்னும் அங்கு அவர்களுடைய ஆடைகள் பட்டா(லானவையா)க இருக்கும்.

அல்குர்ஆன் 35:33

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

06

جَنَّةُ الْفِرْدَوْسُ

# ஜன்னதுல் ஃபிர்தவ்ஸ்

## அல்குர்ஆனில் ஜன்னதுல் ஃபிர்தவ்ஸ் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 2

நிச்சயமாக எவர் ஈமான் கொண்டு (ஸாலிஹான) செயல்களைச் செய்கிறார்களோ அவர்கள் (விருந்துக்கு) இறங்கும் இடமாக ஃபிர்தவ்ஸ் என்னும் (சுவனத்) தோட்டங்கள் இருக்கும். அதில் அவர்கள் என்றென்றும் தங்கியிருப்பார்கள். அவர்கள் அதிலிருந்து மாறி (வேறிடம்) செல்ல விரும்ப மாட்டார்கள்.

**அல்குர்ஆன் 18: 107, 108**

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

07

جَنَّةُ النَّعِيمُ

# ஜன்னதுன் நஈம்

## அல்குர்ஆனில் ஜன்னதுன் நஈம் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 11

நிச்சயமாக ஈமான் கொண்டு ஸாலிஹான (நல்ல) அமல்கள் செய்பவர்களுக்கு ( **ஜன்னதுன் நஈம் எனும்** ) பாக்கியமுள்ள சுவனபதிகள் உண்டு. அவர்கள் அங்கு என்றென்றும் தங்குவார்கள் – அல்லாஹ்வின் வாக்குறுதி உண்மையானது. அவன் (யாவற்றையும்) மிகைத்தவன், ஞானம் மிக்கோன்.

அல்குர்ஆன் 31:8,9

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

08

# مَقَامٍ اَمِيْنٍ

# மகாமுன் அமீன்

## அல்குர்ஆனில் மகாமுன் அமீன் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 1

பயபக்தியுடையவர்கள் நிச்சயமாக (**மகாமுன் அமீன்** எனும்) அச்சமற்ற, இடத்தில் இருப்பார்கள். சுவனச் சோலைகளிலும், நீர் ஊற்றுகளிலும் (இருப்பார்கள்).

அல்குர்ஆன் 44: 51, 52

# அல்குர்ஆன் கூறும் சுவர்க்கங்கள்

09

# مَقْعَدُ صِدْقٍ

## மக்அது ஸித்க்

அல்குர்ஆனில் மக்அது ஸித்க் எனும் வார்த்தை இடம் பெற்றுள்ள இடங்கள் : 1

நிச்சயமாக பயபக்தியுடையவர்கள் சுவர்க்கச் சோலைகளில் (அவற்றிலுள்ள) ஆறுகளில் இருப்பார்கள். வலிமைமிக்க அரசனிடம் உண்மையான இருப்பிடத்தில் இருப்பார்கள்.

அல்குர்ஆன் 54: 54,55